
# சந்நிதியான் ஆச்சிரமம்

## சேவைகள்

## பணிகள்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# சந்நிதியான் ஆச்சிரமம் தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் (1988-2007வரை)

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றும் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்றும் அன்றும் - இன்றும் மக்கள் பணி ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் பற்றியன சந்நிதி முருகன் திருப்பாதங்களில் பணிவன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

செல்வச்சந்நிதி முருகன் வாசலின் நேர் வீதியில் சொற்ப தூரத்தில் உள்ள அரசம்மா மடமே "சந்நிதியான் ஆச்சிரமத்தின்" தோற்றமாகும். "சந்நிதியான் ஆச்சிரமம்" பெயரில் 1988 பங்குனி உத்தரத்தன்று காலஞ்சென்ற கைதடி T. வேலாயுதன், கொ.க.ஆ. கந்தையாபிள்ளை, கு. சிவசம்பு ஆகியோருடன் இ. திலகநாதன் போன்றோரின் பூரண ஒத்துழைப்புடனும், உதவியுடனும் சந்நிதியான் ஆச்சிரமத்தினை திரு செ. மோகனதாஸ் அவர்கள் ஆரம்பித்தார்கள்.

சிறுவயது முதலே, ஆனந்தாச்சிரம நிர்வாகியாகவிருந்த மறைந்த மயில்வாகன சுவாமி அவர்களுடன் நேரடித் தொடர்பில் பெற்ற அனுபவமும், சுவாமிகளின் அறிவுரையும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆரம்ப காலத்துக்குப் பெரிதும் உதவின. "எனது மறைவுக்குப் பின் நீ எங்குமே போகவேண்டாம். முருகன் காலடியிலேயே இந்த அன்னப்பணியையே தொடர்ந்து செய்து வா. முருகன் துணை நிற்பான்" என்று மறைந்த மயில்வாகனம் சுவாமிகள் அடிக்கடி மோகனதாஸ் அவர்களிடம் கூறுவார். இதையே தாரக மந்திரமாகக் கொண்டும், அவரையே மானசீகக் குருவாகக்கொண்டும் தன் பணியை ஆரம்பித்தார் மோகனதாஸ் சுவாமிகள். ஆரம்ப காலத்தில் அன்னப்பணிக்காகத் தானும் தனது உதவியாளர்களும் பட்ட துன்பங்கள்பற்றி அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்வார் சுவாமிகள்.

1990க்குப் பிந்திய காலப்பகுதி சந்நிதியான் ஆச்சிரமத்துக்குப் பெரும் சோதனைக் காலமாகவே இருந்தது. வெள்ளிதோறும் ஆற்றிவந்த அன்னப்பணி எங்கே தடைப்பட்டு விடுமோ என்கிற நிலை கூட இருந்தது. வெள்ளியன்று பணி முடிந்ததும், சனியன்று காலையில் சுவாமிகளும் - அவரது உதவியாளர் மூன்று நான்குபேரும் துவிச்சக்கர வண்டியில் கொம்படி ஊரியான் பாதையினூடாகப் பல சிரமங்களையும் தாண்டிச் சென்று வட்டக்கச்சி- இராமநாதபுரம்- கண்டாவளை- கனகாம்பிகைக்குளம் போன்ற இடங்களில், பலரிடமும் நெல்லைப்பெற்று, அரிசி ஆலையில் கொடுத்து அரிசியாக்கி மூடையாகக் கட்டி செவ்வாய் அல்லது புதனன்று ஆச்சிரமம் திரும்புவர். இந்த அரிசி அடுத்த வெள்ளியன்று பயன்படும். மீண்டும் அதே சைக்கிள் பிரயாணம்.

அந்தக் காலகட்டத்தில் வர்த்தகப் பிரமுகர்களாகவும் அரிசிஆலைச் சொந்தக் காரர்களாகவும் இருந்த நெல்லியடி ஐ. சிவநாதன், இ. புவனேந்திரராசா, சு. சண்முக சுந்தரம், நா. தெய்வேந்திரம், மாலிசந்தி A.S.S. இராமச்சந்திரன், யாழ் க.கு. கந்தையாப் பிள்ளை ஆகியோரும் அன்னப்பணிக்கு ஆற்றிய உதவிகளை ஆச்சிரம சுவாமிகள் அடிக்கடி நினைவுபடுத்திக் கூறுவார்.

1990-1991 காலப்பகுதியில் யாழ் செயலகத் திட்டப்பணிப்பாளராக இருந்த திரு செ. பத்மநாதன் அவர்கள் வாராவாரம் 25பேர் பயனடையக்கூடியதாகக் கொடுத்த நிவாரண உதவியும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு சி. முருகேசம்பிள்ளை அவர்கள் மூலம் வாராவாரம் கிடைத்த 25பேர் பயனடையும் நிவாரண உதவியுமாக மொத்தம் 50பேருக்கு உணவுப்பசி போக்க உதவியது. பின்னர், கரவெட்டி உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு செ. ஸ்ரீநிவாசன் அவர்களும் தன்னாலான முழு உதவியும் நல்கி வந்தார்கள்.

இந்தக் காலப்பகுதியில் இரு முக்கிய சம்பவங்கள் ஆச்சிரமம் தொடர்பாக நடைபெற்றன.

1) மறைந்த தும்பளை முருகேசு சுவாமிகளும், திரு ஆ. அருணாசலம் அவர்களும், இன்னும் சிலரும் ஆச்சிரமத்து அனைத்து விடயங்களிலும் திரு மோகனதாஸ் சுவாமிகளுக்குத் தோள் கொடுக்க முன்வந்தனர்.

2) உடுப்பிட்டியூர் பெருந்தகை காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை, தங்கராசாப் பத்தர் அவர்கள், தற்போது சந்நிதியான் ஆச்சிரமம் இயங்கிவரும் இந்தக் காணியினைத் தனது சொந்தச் செலவில் வாங்கி ஆச்சிரமத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார். அன்னார் செய்த இந்த உதவியானது ஆச்சிரமத்தால் என்றும் நன்றியோடு நினைவு கூரப்படும்.

மறைந்த முருகேசு சுவாமிகள், குகன்ஸ்ருடியோ திரு அ. நாகரெத்தினம், மற்றும் அக்கறையுள்ள அடியார்கள் பலரது அயராத முயற்சியின் பயனாக, சந்நிதியான் ஆச்சிரமத்தின் புதிய கட்டிடத் திறப்புவிழா 05-05-1995 வெள்ளியன்று கைகூடியது. முருகன் துணைநிற்க, நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திறந்து வைக்க, சுவாமி சித்ருபானந்தா அவர்களது ஆசியுரையுடனும், திரு ஆறு திருமுருகன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவுடனும் விழா இனிதே நிறைவெய்தியது.

வடக்கு - தெற்காக 90அடி நீளமான மண்டபத்தின் தென்கோடியில் ஒரு பரந்த மேடை. வடக்குப் பார்த்தபடி - இரண்டு அறைகள். அதில் மேற்காக இருப்பது சுவாமி அறை. நடுநாயகமாக முருகப்பெருமானும், மற்றும் நடராஜர், பின்னாளில் பிரதிஷ்டை செய்யப்பட்ட வாரியார் சுவாமிகளின் விக்கிரகம் போன்றவையும் காணப்படுகின்றன.

மேற்குப்பார்த்தபடி உணவுப் பண்டசாலையாகவுள்ள இரு அறைகள். அத்தோடு இணைந்தபடியான சமயலறை. இவையே ஆரம்பகால ஆச்சிரம அமைப்பு.

பின்னாளில், அதாவது 17-03-1997 திங்களன்று திரு வே. முருகேசு சுவாமிகள் சிவபதமடைந்தார். அவது மறைவு ஆச்சிரமத்துக்கும், சுவாமிகளுக்கும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத பேரிழப்பாக அமைந்தது. அன்னாரின் நினைவாக, சுவாமி அறையின் சரி பின்புறமாக, வடக்கு தெற்காக விஸ்தாரமான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு, 1998இல் மறைந்த முருகேசு சுவாமிகளின் முதலாவது குருபூசை தினத்தன்று அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

"தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் நினைவு மண்டபம்" என வெள்ளித் தகட்டினால் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண்டபத்தின் மேல் விதானம் முழுவதும் திருக்கோயில்கள் பலவற்றினதும் முகப்புத் தோற்றங்கள் அழகு வர்ணத்தில் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. இந்த சித்திர அலங்கார வேலைப்பாடுகளும் - வர்ணப்பூச்சுக்களும் ஏனைய மண்டபங்களில் மேல் விதானங்கள் முழுவதும் அண்மையில் நடைபெற்றிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

முன் மண்டபத்தினை அலங்கரிக்கும் அமரரான சுவாமிகள், ஞானிகள் பலரதும் பெரிய புகைப்படங்கள் பார்ப்போரைப் பரவசப்படுத்துகின்றன. மேடையுடனான "கேட்போர் கூடம்" (வட- தெற்கு மண்டபம்) காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட பெறுமதியான புகைப்படங்கள், ஆச்சிரம சுவாமிகளுக்கும் - இன்னும் பலருக்கும் வழங்கப்பட்ட வாழ்த்து மடல்கள் யாவும் கண்ணாடிப் படங்களாக அலங்கரிக்கப்பட்டுள்ளன.

ஆச்சிரமத்தின் "தோற்றமும் வளர்ச்சியும்" பற்றி இதுவரை பணிவோடு பகர்ந்தோம். "பணிகள்" பற்றித் தனித்தனியாகத் தருகிறோம்.

## சைவ கலை பண்பாட்டுப் பேரவை

வெள்ளிக்கிழமைதோறும் முருகன் சந்நிதியின் பின்புறம் பூவரச மரத்தடியில் பெரியவர்கள் பலரும் ஒன்றுகூடிப் பஜனை செய்வார்கள். ஆர்மோனியம், மிருதங்கம், கெஞ்சிரா, புல்லாங்குழல் சகிதம் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளும் சில அடியார்களும் தவறாது கலந்துகொண்டு வந்தனர். இளம் தலைமுறையினர் அதிகம் ஆர்வம் காட்டாமையால் படிப்படியாக இந்த கைங்கரியம் நின்றுபோனது.

இந்தச் சம்பவம் மோகனதாஸ் சுவாமிகளின் மனத்தில் உறுத்தவே, பிள்ளையார் வாசலிலே பிரதி வெள்ளிதோறும் பஜனை நடாத்த ஏற்பாடாகியது. அதுவும் சில காலங்களில் தடைப்பட நிரந்தரமான ஏற்பாடுகளைச் சுவாமிகள் மேற்கொள்ளலானார்.

அதன்படி 27-09-1992இல் ஒரு தற்காலிக செயற்குழு நியமிக்கப்பட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சார்பாக "சைக கலை பண்பாட்டுப் பேரவை" தோற்றம் பெற்றது. இந்தப் பேரவையே ஆச்சிரமத்து வெள்ளி நிகழ்வுகளைத் திட்டமிட்டு வாரம்தோறும் செய்து வருகிறது. 1993இல் பேரவைக்கான நிரந்தர செயற்குழு தெரிவுசெய்யப்பட்டதுடன் இற்றைவரை நான்குமுறை செயற்குழுவின். முறைப்படியான தெரிவுகளும் நடைபெற்றுள்ளன.

பஜனை, பண்ணிசை, வில்லுப்பாட்டு, சொற்பொழிவு என வெள்ளி நிகழ்வுகள் தொடரவே, மாதந்தோறும் கடைசி வெள்ளியன்று வெளியாகும் பேரவையின் "ஞானச்சுடர்" ஆன்மீக சஞ்சிகை பத்தாவது வருடம் கடந்து பிரகாசித்த வண்ணம் உள்ளது. (ஞானச்சுடர் விபரம் தனியாக வரும்)

## வைகாசிப் பெருவிழா

16-05-1993 தொடக்கம் பிரதி வருடமும் வைகாசி விசாகத்தன்று, ஆச்சிரமத்தின் சிறப்பு விழாவான "வைகாசிப் பெருவிழா" நடைபெற்று வருகிறது. அறிஞர்கள் பலரதும் சொற்பொழிவுகளும், கல்லூரி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும், பண்ணிசைகள், வில்லுப்பாட்டு என அன்றையவிழா ஆச்சிரமத்தின் கோலாகல விழாவாக நடைபெறுவது வழக்கம்.

# விசேட கௌரவிப்பு

வைகாசிப் பெருவிழாக் காலங்களில் சொற்பொழிவுகள், பண்ணிசைகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளுடன் பல துறை சார்ந்த சமூகப் பிரமுகர்களும், கற்றறிந்த பெரியோரும் விசேடமாகக் கௌரவிக்கப்படுகின்றனர். கௌரவம் பெறுவோர் பொன்னாடை போர்த்தப் பட்டு, அவரவர் பட்டம் பொறிக்கப்பட்ட விருதுகள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்படுகின்றனர்.

**16-05-1993 - ஒரே நாளில் மூவர் கௌரவிக்கப்பட்டனர்.**
**ஞாயிறு**
1) பண்டிதர் க. முத்துவேலு
"ஞான பண்டித இயலரசு"
2) அமரர் கதிர் தணிகாசலம்
"ஞான பண்டித ஆய்வரசு"
3) திரு S. குமாரசாமி
"ஞான பண்டித இசையரசு"

22-05-1994 - ஞாயிறு
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
"ஞான பண்டித தமிழ்க் குரிசில்"

14-06-1998 ஞாயிறு
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
"ஞான பண்டித கலாவித்தகி

29-05-1999 - சனி
டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை
"ஞான பண்டித சேவா சுரபி"

03-06-2001 - சனி
அமரர் அருட்கவி சீ. விநாசித்தம்பி
"ஞான பண்டித அமுத சுரபி"

24-05-2002 - வெள்ளி
திரு T.N. பஞ்சாட்சரம்
"ஞான பண்டித விமலைதாசன்"

30-05-2004 - ஞாயிறு
திரு வை. வேலும்மயிலும்
"ஞான பண்டித சேவா ஜோதி"


09-06-2006 - வெள்ளி
திரு கு. கங்கைவேணியன்
"ஞான பண்டித ஆன்மீகச் செம்மல்"



முருகநாம பஜனையின்போது ஆச்சிரம சுவாமிகளுடன் அடியார்கள் இணைந்து வழங்கும் பஜனை நிகழ்வு.




1990ஆம் ஆண்டு நடைபெற்ற மயில்வாகன சுவாமிகள் குருபூசையின்போது தவத்திரு முருகேசு சுவாமிகள் போட்டியில் பங்குபெற்ற மாணவன் ஒருவருக்கு பரிசுவழங்கும் நிகழ்வில் சுவாமி அவர்களின் அடியவர் ஆகிய திருமதி பவானி தர்மலிங்கம் குடும்பத்தினர் காட்சியளிக்கும் நிகழ்வு.




1991ஆம் ஆண்டு மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகளுள் ஒருவருக்கு முருகேசு சுவாமிகள் பரிசு வழங்குதல்.



1991ஆம் ஆண்டு நடைபெற்ற மயில்வாகன சுவாமி அவர்களின் குருபூசை நிகழ்வில் போட்டியில் கலந்துகொண்ட மாணவி உரையாற்றும் நிகழ்வு.



1992ஆம் ஆண்டு நடைபெற்ற மயில்வாகன சுவாமிகள் குருபூசை நிகழ்வில் போட்டியில் பரிசுபெற்ற மாணவி ஒருவருக்கு பண்டிதர் க. முத்துவேலு அவர்கள் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு.



1992ஆம் ஆண்டு நடைபெற்ற மயில்வாகன சுவாமிகளின் குருபூசை நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கவிமணி க. ஆனந்தராசா அவர்கள் கலந்துகொண்ட நிகழ்வு.



16.05.1993ஆம் ஆண்டு வைகாசிப்பெருவிழாவில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் உரையாற்றும் காட்சி.




16.05.1993ஆம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப் பெருவிழாவின்போது சிறப்புரை ஆற்றும் கனக. நாகேஸ்வரன் அவர்கள்.



2002ஆம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப்பெருவிழாவின்போது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் விழாவிற்குரிய விருதினை ஆலய பூசகர் திரு ஆ. சிவசண்முக ஐயரிடம் இருந்து ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு.



2002ஆம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப்பெருவிழாவின்போது வருகை தந்த ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகளுக்கு வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மாலை அணிவிப்பதோடு ஞான பண்டித விமலதாசன் T.N. பஞ்சாட்சரம் அவர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் காணலாம்.




வருடாந்த வைகாசிப்பெருவிழாவில் பேரவையினால் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கட்கு சந்நிதி ஆலய பூசகரும் பேரவைப் போஷகருமாகிய வி. இருாசேந்திரக் குருக்கள் அவர்கள் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு.



வருடாந்த வைகாசிப்பெருவிழாவில் கௌரவிக்கப்பட்ட வேலும்மயிலும் பேரவையின் போஷகர்களும் மேடையில் அமர்ந்திருக்கும் காட்சி.



16.05.1993ஆம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப்பெருவிழாவின்போது பேரவையினால் விருது வழங்கப்பட்ட திரு கதிர் தணிகாசலம் அவர்களுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஞானபண்டித ஆய்வரசு என்னும் விருதினை வழங்கி பொன்னாடை அணிவிக்கும் காட்சி.




25.09.1999ஆம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப்பெருவிழாவின்போது ஞானபண்டித சேவா சுரபி எனும் விருதினைப்பெற்ற வைத்திய கலாநிதி திரு சி. கதிரைவேற்பிள்ளை அவர்களைப் பாராட்டி திரு சி. முருகேசம்பிள்ளை அவர்கள் உரையாற்றும் நிகழ்வும் மேடையில் பேரவையின் போஷகர்கள் நல்லை ஆதீன முதல்வரும், பிரம்மஸ்ரீ ப. மனோகராக்குருக்களும் வீற்றிருக்கும் காட்சி.



30.05.2004இல் நடைபெற்ற வைகாசிப்பெருவிழாவின்போது பேரவையினால் ஞானபண்டித சேவா ஜோதி என்னும் விருதினை வழங்கிக் கௌரவித்த திரு வை. வேலம்மயிலும் அவர்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து மங்கள வாத்திய சகிதம் ஆச்சிரமத்திற்கு அழைத்துவரப்படும் காட்சி



09.06.2006 நடைபெற்ற வைகாசிப்பெருவிழாவின்போது ஞானபண்டித ஆன்மீகச் செம்மல் என்னும் விருதினை செஞ்சொற் செல்வர் திரு ஆறு திருமுருகனிடம் இருந்து திரு குமாரசாமி கங்கைவேணியன் அவர்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு.

## அதி விசேட கௌரவிப்பு

உள்ளூர்ச் சொற்பொழிவு வேளைகளிலும் சரி, தனது வெளிநாட்டு ஆன்மீகச் சுற்றுலா வேளைகளிலும் சரி, எங்கு சென்றாலும், அங்கெல்லாம் சந்நிதியான் ஆச்சிரமத்து பணிகள்பற்றி அனைவரும் அறியும் வண்ணம் எடுத்து விளக்கிவரும்,

திரு ஆறு திருமுருகன் அவர்களுக்கு 09-10-1999 சனியன்று தனியான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

## மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை

ஆனந்தாச்சிரமத்தின் நிர்வாகியாக நீண்டகாலம் அன்னப்பணியாற்றி மறைந்த மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை ஆடிச் சித்திரை தினத்தன்று விசேட பூசாராதனைகளுடன் நடைபெறுகிறது.

அன்றைய தினத்தில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி ஆகியனவும் நடைபெற்று, வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படுகின்றன. அத்துடன் பங்குபற்றிய மாணவர் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

## ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் "சைவ கலை பண்பாட்டுப் பேரவை" யினால் மாதந்தோறும் வெளிவரும் ஆன்மீக சஞ்சிகையே "ஞானச்சுடர்" ஆகும்.

ஆச்சிரமப் பணிகளை வெளிக்கொணர்வதும், ஆர்வமுள்ள அனைவரையும் ஆன்மீகப் பணியில் தூண்டுவதும், தினசரி அன்னப்பணிக்கு அள்ளிக்கொடுப்போரை அறிமுகப்படுத்தி - ஏனையோரையும் இப்பணியில் ஊக்குவிப்பதும், ஆன்மீகம் சார்ந்த கட்டுரையாளர்களதும், சிந்தனையாளர்களதும் திறமைகளை வெளிக்கொண்டு வருதலும் ஞானச்சுடரின் பிரதான நோக்கமாக இன்றுவரை இருந்து வருகிறது.

நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தில், 250 பிரதிகளுடன், 1998- தை மாதம் முதற் "சுடர்" ஒளி வீசியது. ஆடி மாதம்வரை இந்நிலையே நீடித்தது. ஞானச்சுடரின் பணியினை விரிவுபடுத்தி- துரிதப்படுத்த விரும்பிய மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்திற்கென்றே அச்சியந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்து, 1998 ஆவணி மாத ஞானச்சுடர்ப் பிரதிகள் ஆச்சிரம வளாகத்திலிருந்தே வெளியாகின.

2004- ஐப்பசி முதல் கணினி மயப்படுத்தப்பட்டு - கணினி அச்சுப்பதிவாக, அட்டைப் படத்தில் வேலவனின் திருத்தோற்றத்தினை முகப்பாகக் கொண்டு "சுடர்" பிரகாசித்தது. படிப்படியாகப் பிரதிகள் தொகை அதிகரித்து, இன்று, வெளிநாடுகளுக்கு 125 பிரதிகளும், கொழும்பு 250 பிரதிகளும், உள்ளூருக்கு 1400 பிரதிகளுமாக மொத்தம் 1750 பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. இதைவிட உலகம் பூராகவும் ஆன்மீக ஆவல் கொண்ட அன்பர்களின் வசதிக்காக வெப்சைற் www. sannithiyan. org இல் எந்நேரமும் பார்க்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

சராசரி 52 பக்கங்களுடன், அளவில் பெரிதாக, வெளிவரும் ஞானச்சுடர்ச் சஞ்சிகையில் விளம்பரம் எதுவும் வருவதில்லை. ஆசிரியர் யாருமில்லை. ஆனால் மலருக்கான ஆக்கங்களை தெரிவுசெய்ய ஒரு "மலர்க்குழு" இயங்குகிறது.

அட்டையில் முருகனின் வண்ணத் தோற்றம் - தொடர்ந்து - குறள்வழி, நற்சிந்தனை, வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை, சுடர் தரும் தகவல், இடையிடையே அறுமுகத்து அண்ணலின் புகழ்பாடும் கவிதைகள்- இவ்வாறு பக்கங்கள் புரளும். அறிஞர் பெருமக்கள், கற்றறிந்தோரின் தரமான கட்டுரைகள் தொடராகவும் - தனியாகவும் சுடரில் ஒளிரும். கீழே கறுப்பு வெள்ளைக் கட்டத்தில் பொன்மொழிகள், சொற்றொடர்கள், அறிவூட்டும் அழகுதமிழ் வசனங்கள் மின்னும். நித்திய அன்னப்பணிக்கு அள்ளிக்கொடுக்கும் பெருந்தகையாளர்களின் பெயர்ப்பட்டியல் நீளும்.

பிற்பக்க அட்டை சந்நிதி முருகனுக்கு நிரந்தரமான ஒதுக்கீடு. அந்தந்த ஆண்டுக்கான செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் வருடம் முழுவதும் வெளிவரும்.

இதுவே ஞானச்சுடரின் அழகு வடிவம்.

# 100ஆவது ஞானச்சுடர் வெளியீட்டு விபரம்

30-04-2006 அன்று ஞானச்சுடரின் 100ஆவது மலர் வெளியீடு பேரவைத் தலைவர் க. அருள்லிங்கம் அவர்கள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது.

விசேட மலருக்கான ஆக்கங்கள் வழங்கியோர், இதற்கு முந்திய மலர்களின் மதிப்பீட்டுரை - வெளியீட்டுரை நிகழ்த்திய அறிஞர் பெருமக்கள், அன்றைய தினம் விசேட கௌரவம் பெறுவோர், ஆர்வலர்கள் என மக்கள் கூட்டம் மண்டபம் நிரம்பி வழிந்தது.

மலரின் முன் அட்டையில் முருகன் புன்னகைப் பொலிவுடன் வளுவளுப்பான அழகிய காகிதத்தில் 124 பக்கங்களில், ஆச்சிரமத்தின் முக்கிய நிகழ்வுகளை நிழற்படுத்திய 28 புகைப்படங்களுடன், ஆரம்பகாலம் முதல் ஆக்கங்களை வழங்கிவந்த அறிஞர் பெருமக்களின் பங்களிப்புடன் மலர் தயாராகி இருந்தது.

செல்வச்சந்நிதி முருகன் சந்நிதானத்தில் முதற் பிரதி வைக்கப்பட்டு விசேட பூசை முடிவுற்ற பின்னர், பவனியாக ஆச்சிரம மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டது.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள், சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் ஆகியோரின் ஆசியுரையுடன் விழா ஆரம்பமானது.

வாழ்த்துரையினை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்னாள் வைத்திய அதிகாரி திரு சி. கதிரைவேற்பிள்ளை, எழுத்தாளர் தெணியான், செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல், அன்னைதாசன் க. ஆனந்தராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டு உரையினை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்தியதுடன் மலரையும் வெளியிட்டு வைத்தார். மலரின் மதிப்பீட்டுரையினை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் S. சிவலிங்கராசா நிகழ்த்தினார்.

ஞானச்சுடர் ஆரம்ப காலங்களில் இருந்து ஆக்கங்களை வழங்கிக் கௌரவிக் கப்பட்டவர்கள் சார்பாகத் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களும், இசை ஆசிரியர் திரு சி. சிவஞானராஜா அவர்களும் பதிலுரை வழங்கினர்.

## 100ஆவது சிறப்பு மலருக்கு ஆக்கங்களை வழங்கியோர்

### கட்டுரை வழங்கியோர்

திரு செ. கந்தசத்தியதாசன்
Dr. அருள்மொழி சுதர்ஸன்
திரு இராசையா ஸ்ரீதரன்
திரு க. சிவசங்கரநாதன்
திரு கனகசபாபதி நாகேஸ்வரன்
திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்
பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்
சமூகமணி சி.சி. வரதராசா
சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
காரை எம்.பி. அருளானந்தன்
சிவ ஆறுமுகசாமி J.P
திருமதி கோகிலா மகேந்திரன்
திரு கா. கணேசதாசன் J.P
திரு நாகராசா B.A
ஆசிரியர் ஆ. சிவநாதன்
திரு ஆர்.வீ. கந்தசாமி J.P
செல்வி அ. கந்தையா
திரு சிவ மகாலிங்கம்
திரு இரா. செல்வவடிவேல்
பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா
செல்வன் தி. மயூரகிரி
திரு சி. செல்லமுத்து
திரு இ. சாந்தகுமார்
திரு கு. சிவபாலராஜா
செல்வி தி. வரதவாணி
திரு கே.எஸ். ராஜா
திரு S.S. றஜீந்திரன்
திரு சிவலிங்கம்
திரு இ. சிவலிங்கம்
திரு சு. இலங்கநாயகம்
திரு ந. அரியரத்தினம்
கோப்பாய் சிவம்
ஆசிரியர் ச. லலீசன்
திரு கு. குணாளன்
திரு கு. நவரத்தினராஜா
திரு க. நடேசன் (தெணியான்)
திரு நா. நல்லதம்பி
திரு சிவ சண்முகவடிவேல்

### கவிதைகள் புனைந்தோர்

திருமதி R. கஸ்தூரிராஜா M.A (தமிழ்நாடு)
செல்வி ஆரபி சிவஞானராசா
கவிமணி க. ஆனந்தராசா
ஆசிரியர் துரை கணேசமூர்த்தி
திருமதி சுலோஜனா ஜெயதாசன்
சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்
கவிஞர் வ. யோகானந்தசிவம்
முருகவே பரமநாதன் (கனடா)
கலைமணி க. தெய்வேந்திரம்
நயினை விஜயன்
நீர்வை மணி
பொன் சுகந்தன்
கே. எஸ். எஸ்
சைவப்புலவர் சு. செல்லத்துரை
புலவர் வை.க. சிற்றம்பலவனார்
கவிஞர் ஆ. கதிர்காமத்தம்பி
திரு ஆலய மணியன்

இலண்டனில் உள்ள திருமதி சக்தி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் விசேட வாழ்த்துரையும், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனின் "பிரார்த்தனை உரை"யும், வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை அவர்களின் ஆச்சிரம வைத்திய சேவை பற்றிய குறிப்பும், சிவதொண்டன் நிலையத்தார் வழங்கிய ஆக்கமும் மலரை அலங்கரித்தன.

மற்றும் திரு ம.க. ஸ்ரீதரன், பேரவைத் தலைவர் க. அருள்லிங்கம், சைவப்புலவர்

க. நித்தியதசீதரன், உரும்பராய் கணபதி நிறுவனம் ஆகியோரின் வாழ்த்து உருவாக்கங்களும் மலருக்கு மேலும் மெருகூட்டின.

வாரியார் சுவாமிகளின் வளமான கருத்துக்கள், பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் அருள்வாக்கும் மலருக்கு மணம் சேர்த்தன. ஆச்சிரமத்தின் பல்வேறு கட்டங்களிலும் நடைபெற்ற சமுதாயப்பணி, வைத்தியப் பணி, அன்னப்பணி, கௌரவிப்பு ஆகியவை பற்றிய 28 புகைப்படங்களும் வண்ண நிறத்தில் ஒளி வீசின.

2004, 2005 காலப்பகுதியில் ஞானச்சுடருக்கு ஆக்கங்களை வழங்கிய அனைவருக்கும், 1998 முதல் பிரதி மாதமும் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை வழங்கிய பெருமக்களுக்கும் பொன்னாடை போர்த்தி, அவரவர் பெயரும் பேரவையின் குறியீடுகளும் பொறித்த பெறுமதியான விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பேரவைச் செயலாளர் ந. அரியரத்தினம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

## ஆண்டுதோறும் வாசகர் போட்டி

வருடந்தோறும் ஞானச்சுடர் ஆண்டுவிழாவினையொட்டி அறிவிக்கப்படுகின்ற வாசகர் போட்டியில் பல நூற்றுக்கணக்கானவர்கள் பங்குகொள்கின்றனர். வருடாவருடம் போட்டியாளர்களின் தொகை அதிகரித்தவண்ணம் உள்ளது. வெற்றி பெற்றவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

## மறைந்த முருகேசு சுவாமிகள் குருபூசை

1990 முதல் ஆச்சிரமத்தின் சகல செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர் தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் ஆவார். ஆச்சிரம சுவாமிகளுடன் எல்லாக் காரியங்களிலும் உறுதுணையாக நின்ற அப்பெரியார் 17-03-1997இல் சமாதி அடைந்தார். அன்னாரின் குருபூசை தினத்தில் வருடந்தோறும் விசேட பூசாராதனைகள் நடைபெறுகின்றன.

மறைந்த முருகேசு சுவாமிகளின் 16ஆம் நாள் நினைவு நாளன்று (31-03-2007இல்) யாழ்குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகிய சிறப்பு மலரில் சுவாமிகள் பற்றிய சிறப்புக் கட்டுரை வெளியாகி இருந்தமையையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வில் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களிடமிருந்து சுசிலா நகைமாட உரிமையாளர் சிறப்புப்பிரதி ஒன்றினை பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்.



2002ஆம் ஆண்டு தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வெளியீட்டுரை நிகழ்த்தும் திரு ஆறு திருமுருகன் அவர்களும் மதிப்புரை ஆற்றவந்த சிவநாதன் அவர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.



2001ஆம் ஆண்டு ஞானச்சுடர் வெளியீட்டின்போது வெளியீட்டுரை நிகழ்த்த வந்த அ.த.க. கிருஷ்ணராசா அவர்கள் உரையாற்றுவதோடு மதிப்புரையாற்ற வந்த இரா. செல்வவடிவேல் ஆசிரியர் அவர்களும்.



2004ஆம் ஆண்டு ஞானச்சுடர் மலர் வெளியீட்டின்போது மலருக்காகிய வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைக்காக வருகைதந்த சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்களும் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும்.




2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஞானச்சுடர் வெளியீட்டின்போது வெளியீட்டுரை நிகழ்த்த வந்த திரு து. வைத்திலிங்கம் அவர்களுடன் மதிப்புரையாற்றும் புத்தொளி சிவபாதம் அவர்கள்.




2001ஆம் ஆண்டு ஞானச்சுடர் வெளியீட்டின்போது மதிப்புரையாற்றும் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள்.




2000ஆம் ஆண்டு ஞானச்சுடர் வெளியீட்டின்போது து. வைத்திலிங்கம் அவர்களால் வழங்கப்பட்ட சிறப்புப்பிரதி ஒன்றினை பெற்றுக்கொள்ளும் நிகழ்வில் சைவப்புலவர் செல்வி க. சசிலேகா அவர்கள் பெற்றுக்கொள்வதையும் அருகிலே பேரவை உறுப்பினர்களும்.



வாசகர் போட்டியில் பரிசுபெற்ற வாசகர் ஒருவருக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் பரிசு வழங்கும் நிகழ்வு.



பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்குவோரை கௌரவிக்கும் நிகழ்வில் தி. சோமஸ்கந்தராஜக் குருக்களுக்கு ஆறு திருமுருகன் அவர்கள் கேடயம் வழங்கும் நிகழ்வு.



ஆக்கங்களை வழங்குவோரை கௌரவிக்கும் நிகழ்வில் சமூகஜோதி கணேசதாசன் அவர்கட்கு நல்லை ஆதீன முதல்வர் கேடயம் வழங்கும் நிகழ்வு.



ஆக்கங்களை வழங்குவோரை கௌரவிக்கப்படும் நிகழ்வில்
ம.வ. கானமயில்நாதன் அவர்களால் நயினை விஜயரத்தினம் கௌரவிக்கப்படும் காட்சி.



ஆக்கங்களை வழங்கியோரைக் கௌரவிக்கப்படும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ம.வ. கானமயில்நாதன் அவர்கள் உரையாற்றும் நிகழ்வு.



மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை நிகழ்வின்போது போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவர் பேசுவதையும் மேடையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் பொருட்களின் ஒரு தொகுதியும்.



மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை நிகழ்வின்போது போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு சுவாமி சித்ருபானந்தா பரிசில் வழங்குவதையும், முன்பள்ளி ஆசிரியைகளுக்கான உடுபுடவை ஒரு தொகுதியையும் காணலாம்.



போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகளுடன் சுவாமி சித்ரூபானந்தா



மயில்வாகன சுவாமிகளின் குருபூசை நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பருத்தித்துறை பிரதேச உதவித்திட்டப் பணிப்பாளர் நா. மகேந்திரன் அவர்கள் பரிசில் வழங்கும் நிகழ்வு.



2002ஆம் ஆண்டு ஞானச்சுடர் வாசகர் போட்டியில் வெற்றியீட்டிய வாசகர்களுடன் ஆசிரியர்களான துரை. கணேசமூர்த்தியும் பரமேஸ்வரனும் காணப்படுவதைக் காணலாம்.



2003ஆம் ஆண்டு ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசுபெற்ற வாசகர்களுடன் ஆசிரியர் க. நவரத்தினம் அவர்களும் வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை அவர்களையும் காணலாம்.



ஞானச்சுடர் வாசகர் போட்டியில் சிறப்பு விருந்தினருடன் பரிசு பெற்ற வாசகர்களும்.



2003ஆம் ஆண்டு ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசுபெற்ற ஒரு தொகுதி வாசகர்களுடன் சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்.



இளைப்பாறிய அதிபர் ஆ. கதிர்காமத்தம்பி அவர்களால் ஆக்கப்பட்ட சக்தி சிவன் அருளாட்சி எனும் நூல் வெளியீட்டின்போது பேரவைச் செயலாளர் திரு ந. அரியரத்தினம் அவர்கள் உரையாற்றுவதையும் மேடையில் நூலாசிரியர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.



சக்தி சிவன் அருளாட்சி நூல் வெளியீட்டின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மகேஸ்வரன் அவர்கட்கு நூலாசிரியர் ஆ. கதிர்காமத்தம்பி அவர்கள் மாலை அணிவிக்கும் காட்சி.



2000ஆம் ஆண்டு வாசகர் போட்டியில்
வெற்றியீட்டிய மாணவன் ஒருவருக்கு
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்
பரிசு வழங்கும் நிகழ்வு.



2001ஆம் ஆண்டு ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசுபெற்ற வாசகர்களுடன் பேரவை உறுப்பினர்களும் திரு தி. மகேஸ்வரன் அவர்களும் கலந்துகொள்ளும் நிகழ்வு.

முருகேசு சுவாமிகளின் குருபூசை நிகழ்வில் திரு
சி. முருகேசம்பிள்ளை அவர்கள் உரை
நிகழ்த்தும் காட்சி.






மேற்படி சுவாமிகளின் குருபூசை நிகழ்வில் சுவாமிகளின் அடியவராகிய திரு
கே. வீணுகோபால் அவர்கள் உரைநிகழ்த்தும் நிகழ்வு.




[illegible] குருபூசை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவி அரச அதிபர் அமரர் சி. முருகேசம்பிள்ளை அவர்களுக்கு ஆ. அருணாசலம் மாலை அணிவிக்கும் நிகழ்வு.




மேற்படி பூசை நிகழ்வில் கலந்துகொண்ட அடியவர்களில் ஒரு தொகுதியினர்.



ஞானச்சுடர் 100ஆவது மலர் வெளியீட்டின்போது எழுத்தாளர் தெணியான் உரை நிகழ்த்தும் நிகழ்வும், மலருக்கு ஆக்கங்களை வழங்கியவர்களுக்குரிய பரிசில் பொருட்களுடன் பேரவைப்பேரசகர் ப. மனோகரராக்குருக்கள் அமர்ந்திருக்கும் காட்சி.



100ஆவது மலருக்குரிய சிறப்புப் பிரதியினை திருமதி மனோன்மணி சண்முகதாஸிடம் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு.



மேற்படி ஆக்கங்களை வழங்கியோரை கௌரவிக்கும் நிகழ்வில் பேரவைப் போசகர்களுடன் காரை எம்.பி. அருளானந்தன் அவர்களும் காரை கு. சிவராஜசர்மா அவர்களும் அமர்ந்திருக்கும் காட்சி.



மேற்படி விழாவில் ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர் துரை கணேசமூர்த்தி அவர்கட்கு ப. மனோகரக்குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் நிகழ்வு.

# அறுபத்து மூவர் குருபூசையும் – மாகேஸ்வர பூசையும்

மறைந்த தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் முன்னின்று வருடந்தோறும் நடாத்தி வந்த அறுபத்துமூவர் குருபூசைவிழா, 2007ஆம் ஆண்டு முதல் பிரதி வெள்ளிக்கிழமையும் நடைபெற்றுவருகிறது.

(திருமணநாள் - பிறந்தநாள் - நினைவுநாள்) போன்ற நேர்த்திக்காக இப்போது இந்தப் பூசையினில் பங்குகொள்ள பலரும் முன் வருகிறார்கள். அவை தவிர்ந்த ஏனைய வெள்ளிக்கிழமைகளில் ஆச்சிரமம் சார்பாகவே குருபூசைகள் நடைபெறுகின்றன.

1) அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் 63 நாயன்மார்களாக 63பேரும், முருகப் பெருமானாக ஒருவரும் மொத்தம் 64பேர் மண்டபத்தில் உட்காரவைக்கப் படுகின்றனர்.
2) 64 தலைவாழையில் அன்னம் பரிமாறப்படுகிறது.
3) வெற்றிலை- பாக்கு- பழம்- தெட்சணையாக ரூபா 11/= ஆகியவையும் வாழையிலையின் ஒரு பக்கம் வைக்கப்படுகிறது.
4) மண்டபத்தில் சிவபுராணம் ஓதப்பட, அடியார்கள் 64 பேரும் அந்தப் பிரார்த்தனையில் ஈடுபடுகிறார்கள்.
5) தனியாக எல்லா அடியார்களுக்கும் (நாயன்மார்கள் + முருகன்) பஞ்சதீபம் காட்டப்படுகிறது.
6) 64பேரும் வாழையிலையில் உள்ள அனைத்து உணவு வகைகளையும் தொட்டுப் பிசைந்து ஒரு "பிடிசாதம்" தருகிறார்கள்.
7) ஒரு தட்டத்தில் சேகரிக்கப்பட்ட "பிடிசாதம்" தொடர்ந்து நடைபெறுகின்ற அன்னதானத்தில் அனைவருக்கும் "முருகன் மருந்தாக" வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்வானது வாராந்த வெள்ளி நிகழ்வுகள் முடிந்து, அன்னதானம் ஆரம்பமாவதற்கு இடையேயுள்ள நேரத்தில் நடைபெறுகிறது. பார்ப்போர் அனைவரும் பரவசப்படும்படியான பக்திபூர்வமான ஒரு நிகழ்வாக அறுபத்துமூவர் குருபூசை நிறைவு பெறுகிறது.

# திருவாசக விழா

ஆண்டுதோறும் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் திருவாசகவிழாவில் அறிஞர் பெருமக்கள் பலரதும் சொற்பொழிவுகள் இடம்பெறும். இது தவிர பண்ணிசைப் போட்டி முதலானவையும் நடாத்தப்படுகின்றன. தொண்டைமானாறு மகாவித்தியாலய மாணவ மாணவியரின் பண்ணிசை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

07-01-2001இல் நடைபெற்ற திருவாசகவிழாவில் தமிழ்நாடு கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன் (சேக்கிழார் அடிப்பொடி) அவர்களின் விசேட சொற்பொழிவு இடம்பெற்றது. 02-01-2004இல் நடைபெற்ற திருவாசக விழாவில் தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும், தமிழ்நாடு தர்மபுரம் ஆதீனம் டாக்டர்

ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் அவர்களதும் விசேட சொற்பொழிவுகள் இடம்பெற்றமையையும் இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம்.

## அருணகிரிநாதர் விழா

தேனாய் இனிக்கின்ற திருப்புகழை பாரிலுள்ளோர் பாடிப்பரவத்தந்த அருணகிரிநாதர் குருபூஜை தினத்தில் ஆச்சிரம மண்டபத்தில் விசேட பூசைகள் நடைபெறும். அறிஞர் பெருமக்கள், திருவாளர்கள் ஆறு திருமுருகன், ஆ. சிவநாதன், ச. விநாயகமூர்த்தி, சிவ மகாலிங்கம் போன்றோரின் சொற்பொழிவுகளும், இன்னும் பல விசேட நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

## சமுதாயப்பணி

அன்னதானம், ஆத்மீகம் சார்ந்த பணிகளுடன், நலிவுற்றோருக்கு உதவும் சமுதாயப் பணியினையும் ஆச்சிரமம் ஆற்றிவருகிறது. சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சமுதாயப்பணி பல்வேறு பிரிவுகளாகப் பல்வேறு கட்டங்களில் நடைபெறுகிறது.

வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள பல குடும்பங்களின் நிலைவரங்கள் அறியப்பட்டு மாதாந்த உதவியாக, உலர் உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கடந்த பல வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்றன.

11-01-2004இல் ஆரம்பமான இந்த மாதாந்த நிவாரணப் பணியினால் ஆரம்ப கட்டத்தில் சில குடும்பங்கள் மட்டுமே பயன்பெற்று வந்தபோதிலும், இன்று மாதாந்தம் பல குடும்பங்கள் இந்த நிவாரண உதவியினைப்பெற்று வருகின்றன.

ஆச்சிரமத்தின் பல்வேறு விழாக்களை முன்னிட்டும் மூக்குக் கண்ணாடி வழங்குதல், தொழில் ஊக்குவிப்பு முயற்சியாகத் தையல் இயந்திரங்கள் வழங்குதல், வலுவிலந்தோர் சிலருக்கு முச்சக்கரவண்டி வழங்கியமை போன்ற பல உதவிகளும் நடைபெற்றன.

சமுதாயப் பணியின் ஒரு அங்கமாக மாணவர்களின் கல்வியில் கூடுதல் அக்கறையும் கவனமும் செலுத்தப்படுகிறது.

1) கண்களில் குறைபாடுள்ள மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடி.
2) பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்.
3) வசதி குறைந்த மாணவ மாணவியருக்குத் துவிச்சக்கரவண்டி.
4) பாடசாலை மாணவர்களுக்குக் கொப்பி புத்தகங்கள் கட்டிக்கொடுப்பது.
5) உயர்கல்வி மாணவர்களுக்கான (பல்கலைக்கழக மாணவர் உட்பட) மாதாந்த நிதியுதவி.
6) சில மாணவர்களுக்கு தனியார் போதனை (ரியூசன்) வகுப்புக்களுக்கான மாதாந்த பணவுதவி.

போன்றவை இந்த மாணவர் பணியில் அடங்கும். தற்போது புத்தகங்கள்- கொப்பிகள் கட்டிக்கொடுக்கும் பணி தவிர ஏனையவை அனைத்தும் தங்குதடையின்றி தொடருகிறது.

ஆச்சிரமம் சார்பாக, தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலய மாணவர்களுக்கு ஆண்டுதோறும் திருக்குறள் மனனப்போட்டி நடாத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படுகின்றன. அத்துடன், மேற்படி கல்லூரியின் உயர் வகுப்பு மாணவர்கள் 75 பேருக்கு, சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு உத்தியோகத்தர் திருமதி சிவராசா அவர்களால் வழங்கப்பட்ட இலவச சீருடைத் துணிகள், சீருடையாகத் தைத்து வழங்கப்பட்டன.

# முன்பள்ளிச் சேவை

24-01-2004இல் தொண்டைமானாற்றுச் சுற்றாடலில் உள்ள 5 முன்பள்ளிகளுடன் ஆரம்பமான பள்ளிச்சேவை, கரையோரப்பகுதி முழுவதையும் உள்ளடக்கி கற்கோவளம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிகளின் சிறப்பான சேவையினை அவதானித்த கரவெட்டிப் பிரதேச சபையினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, கரவெட்டி யார்க்கரு வரையும், பின்னர் அச்சுவேலி பத்தமேனிப் பகுதிகளையும் உள்ளடக்கி 93முன்பள்ளிகள் ஆச்சிரமத்தால் நிர்வகிக்கப்பட்டன. 93 முன்பள்ளி ஆசிரியைகளுக்கான உடு புடவைகளும், 16 முன்பள்ளி ஆசிரியைகளுக்கான மாதாந்த வேதனமும் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கு நாளாந்தம் சத்துணவாக, 2 நாட்களுக்குக் கடலை- 2 நாட்களுக்குப் பயறு- 1 நாள் லக்ஸ்பிறே சீனி கலந்த ஜீவாகாரம் என வாரத்தின் 5 நாட்களுக்கும் வேண்டிய பொருட்கள் அந்தந்த முன்பள்ளிகளுக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டு வந்தன. இதைவிட இவற்றினைத் தயாரிக்க ஏற்படும் சில்லறைச் செலவுகளுக்காக ஒருதொகைப் பணமும் வாராந்தம் வழங்கப்பட்டது.

அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றுவந்த இப்பணியானது, தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாகவும், பெருமளவு மக்களின் இடப்பெயர்வு காரணமாகவும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# சமூகசேவை

## இலவச வைத்தியப்பணி

சந்நிதியான் ஆலயத்தில் நிரந்தரமாகத் தங்கியுள்ள ஆதரவு அற்றோருக்கும், ஆச்சிரமத்தை அடுத்துள்ள தொண்டைமானாறு- கெருடாவில்- மயிலியதனை- வல்வெட்டித்துறை- உடுப்பிட்டி- பொலிகண்டி ஆகிய ஊர்களிலிருந்தும் வரும் நோயாளர் களைப் பார்வையிட்டு மருந்து மாத்திரைகள் கொடுத்தனுப்பும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

14-10-2001இல் மந்திகை வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை அவர்கள் ஆரம்பித்து வைத்து, பிரதி ஞாயிறுதோறும் அவரே சேவையினை ஆற்றி வந்தார். சிலகாலத்தில், வைத்திய அதிகாரி திரு மா. யோகேஸ்வரதேவர் அவர்களின் பூரண ஒத்துழைப்புடன் சேவை தொடர்ந்தது.

வாராந்தம் நோயாளர்கள் கூடுதல் வரவு அவதானிக்கப்பட்டதால், வைத்திய அதிகாரி பொன் சின்னத்தம்பி அவர்களின் உதவியுடன் 11-01-2004முதல் புதன் கிழமைகளிலும் வைத்தியசேவை விரிவுபடுத்தப்பட்டது. பின்னர், டாக்டர் சி. சிவயோககுரு அவர்களும் சேவையில் இணைந்துகொள்ளவே தற்சமயத்தில் வாரத்தில் இருநாட்கள் (புதன்- டாக்டர் சின்னத்தம்பி, ஞாயிறு- டாக்டர் சி. சிவயோககுரு) சராசரி நூறுபேர் வீதம் வாரமிருமுறை பயன்பெற்று வருகின்றனர்.

இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்குவதுடன் இரத்த அமுத்தம், நீரிழிவு, குருதியில் சர்க்கரையின் அளவிடுதல் போன்றவையும் நடைபெறுகின்றன.

நோயாளர்கள் ஆச்சிரமத்துக்கு வெளியே போய் மருந்துகள் எதனையும் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படாதபடி ஆச்சிரம சுவாமிகள் மிக அவதானமாக இருந்து வருகிறார்.

இரு வாரத்துக்கு ஒருமுறை வருகைதந்த மகப்பேற்று நிபுணர் டாக்டர் G. பவானி அவர்கள், தற்சமயம் பிரதிஞாயிறுதோறும் மாலையில் வருகை தருவதால் அயற்கிராமத்து கர்ப்பிணிப்பெண்கள் பயன்பெற்றுவருகின்றார்கள்.

ஆச்சிரம அழைப்பின்பேரில் கண் வைத்திய நிபுணர் டாக்டர் S. குகதாசன் அவர்களும் சில சந்தாபர்ப்பங்களில் வருகைதந்து, கண்கள் பரிசோதிக்கப்பட்டு இலவசமாகக் கண்ணாடி வழங்கும் நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

## குடாநாடு தாண்டிய கல்விப்பணி

அநுராதபுரத்தில் தமிழுக்கும் சைவத்துக்கும் பெரும் பணியாற்றிவரும் அநுராதபுரம் விவேகானந்த சபையினரின் சேவை அளப்பரியது. காலத்துக்குக் காலம் ஏற்படும் பல்வேறு சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி, பணி செய்வது ஒன்றையே நோக்காகக் கொண்டு இன்றும் இயங்கிவரும் அநுராதபுரம் விவேகானந்த சபையினரைச் சந்நிதியான் ஆச்சிரமம் பெருமிதத்தோடு பாராட்டுகிறது.

அங்குள்ள தமிழ்ச் சிறார்களின் கல்விமேம்பாடு கருதி விவேகானந்த சபையினரால் 1994இல் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலையின் தொண்டர் ஆசிரிருக்கான மாதாந்த வேதனம் இன்றுவரை சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டு வருகிறது. குடாநாடு தாண்டிய ஆச்சிரமத்தின் இப்பணி இனிமேலும் தொடரும்.


அநுராதபுரம் விவேகானந்தாக் கல்லூரி பொன்விழா கொண்டாட்ட நிகழ்வினில் ஆச்சிரம சுவாமிகள் சார்பாகச் சிறப்பு விருந்தினராக பேரவைச் செயலாளர் திரு ந. அரியரத்தினம் அவர்களும், பேரவை உறுப்பினர் திரு செ. நடராசா அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏனைய நிகழ்வுகள்

ஆச்சிரம கேட்போர் கூடத்தில் வழமையான வெள்ளி நிகழ்வுகள் தவிர, ஏனைய பல நிகழ்ச்சிகளும் நிடைபெற்றுள்ளன.

2ஆவது உலகத் தமிழர் மாநாட்டுக்கு அனுசரனையாக வடமராட்சி இந்து இளைஞர் அமைப்புக்கள் இணைந்து வழங்கிய "எழுச்சிவிழா" நிகழ்வு 08-05-2003இல் நடைபெற்றது. அன்றைய தினம் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த மறைந்த தி. மகேஸ்வரன் அவர்கள் தலைமையில், தமிழகத்திலிருந்து விசேட அழைப்பாளராகக் கலந்துகொண்ட தமிழக அறிஞர் முனைவர் இரா செல்வகணபதி அவர்களின் விசேட சொற்பொழிவும் இடம்பெற்றது.


27-04-2004இல் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த மறைந்த தி. மகேஸ்வரன் அவர்களுக்குப், பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்கம் சுவாமிகள் பொன்னாடை போர்த்த, அறிஞர் பெருமக்கள் பலரும் அவரது மக்கள் சேவையைப் பாராட்டி மகிழ்ந்தனர்.



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திரு அ. குமாரவேல் அவர்களால் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை மாணவி ஒருவருக்கு வழங்கும் நிகழ்வு.




பேராசிரியர் க. சிற்றம்பலம் அவர்களால் சுயதொழில் முயற்சியின் நிமித்தம் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை குடும்பத் தலைவியிடம் வழங்கும் நிகழ்வு.



கல்வி மேம்பாட்டினை வளர்க்கும் நோக்குடன் பாடசாலை மாணவர்க்கு வழங்கப்படும் உதவியின் நிமித்தம் மாணவி ஒருவருக்கு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை ஸ்ரீ நதியா நகைமாட உரிமையாளர் ந. சத்தியரூபன் வழங்கும் நிகழ்வு.



வசதிகுறைந்த கல்வியில் ஆர்வமுள்ள பாடசாலை மாணவி ஒருவருக்கு உரும்பராயைச்சேர்ந்த வை. துரைராசா அவர்கள் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை கையளிக்கும் நிகழ்வு.



ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் அறப்பணிகள் வரிசையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவி ஒருவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை திரு ஆறு திருமுருகன் வழங்கும் நிகழ்வில் அவர்களோடு ஆசிரியர் ஆ. சிவநாதன் அவர்களும் நீரவை மணிஐயர் அவர்களும் கலந்துகொள்ளும்நிகழ்வு.



வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பம் ஒன்றிற்கு சுயதொழில் முயற்சிக்காக ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை கு. தியாகராஜசர்மா (நீரவை மணி) அவர்கள் வழங்கும் நிகழ்வு.




கல்விகற்கும் வசதிகுறைந்த மாணவி ஒருவருக்கு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை பாக்கியரெட்ணம் இரும்பு விற்பனை நிலையத்தின் உரிமையாளரால் மாணவியின் தாயாரிடம் வழங்கும் நிகழ்வு.



ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் அறப்பணிகளில் ஊக்குவிக்கும் வகையில் பாடசாலை மாணவி ஒருவருக்கு திரு சி. ஆனந்தராஜா அவர்களால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை கையளிக்கும் நிகழ்வில் சைவப்புலவர் நித்தியதசிதரனும் பேரவைத் தலைவர் க. அருள்லிங்கம் அவர்களும் கலந்துகொள்ளும் நிகழ்வு.



மாணவி ஒருவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் வழங்கும் நிகழ்வு.



வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பம் ஒன்றிற்கு சுயதொழில் வாய்ப்பின் நிமித்தம் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட தையல் இயந்திரத்தினை சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரிடம் கையளிக்கும் நிகழ்வு.




கைதடி நவில் பாடசாலையில் கல்விகற்று உயர்கல்வியின் பொருட்டு கல்வி
கற்பதற்குரிய பெறுமதிமிக்க உபகரணங்களை அதிபர் கு. சண்முகநாதன்
அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நிகழ்வு.



நித்திய அன்னப்பணிக்கு பேருதவி புரியும் அன்பர் ஒருவரால் ஆச்சிரமத்தால்
வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை கல்வியில் சிறப்புற்று விளங்கும்
மாணவன் ஒருவனுக்கு வழங்கும் நிகழ்வு.



ஆச்சிரமத்தில் அறப்பணி வகையில் கண்பார்வை குறைந்த உயர் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கு மக்கள் வங்கி முகாமையாளர் திரு வ. சண்முகநாதமுதலி அவர்கள் கண்ணாடி வழங்கும் நிகழ்வு.



பார்வை குறைந்த ஒருவருக்கு ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் பயனாளி ஒருவருடன் சமூகஜோதி கா. கணேசதாசன் அவர்களும் விரிவுரையாளர் அ. குமாரவேல் அவர்களும் காணப்படுகின்றார்கள்.



முதியோர்களுக்கான கண்ணாடி வழங்கும் நிகழ்வில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஒரு பெண்மணிக்கு ஆச்சிரமப்பணிக்கு உதவிபுரியும் ஒருவரினால் கண்ணாடி வழங்கும் நிகழ்வு.



உயர் கல்வி கற்கும் பார்வைகுறைந்த மாணவி ஒருவருக்கு ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரியும் அன்பர் ஒருவரினால் கண்ணாடி வழங்கும் நிகழ்வு.



ஆச்சிரமத்தால் தைத்து வழங்கப்பட்ட சீருடையை பெற்றுக்கொண்ட மாணவர்களுடன் சீருடைத் துணியை வழங்கிய யாழ் மாவட்ட சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி சிவராஜா அவர்கள் காணப்படும் காட்சி



மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஆச்சிரமத்தால் தைத்து வழங்கப்பட்ட சீருடைபெற்ற ஒருதொகுதி மாணவர்களுடன் சிவ ஆறுமுகசாமி அவர்கள் காணப்படுகின்றார்.



வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில் வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ் அவர்கள் தமது குழுவினருடன் வில்லிசை வழங்கும் நிகழ்வு.



கந்தசஷ்டிகால விசேட நிகழ்வில் தொடர் பட்டிமன்றம் நடாத்திய விரிவுரையாளர் அ. குமாரவேல் அவர்களுடன் அவர்தம் குழுவினர்.



வாராந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் நிகழ்வில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள்.




பிரதி வெள்ளிதோறும் நடைபெற்றுவரும் வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில் சுவாமி ராஜ்குமார் அவர்கள் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம்.




1994ஆம் ஆண்டு நடைபெற்ற வாராந்த வெள்ளி நிகழ்வில் சிறப்புரை ஆற்றும் யாழ் மாவட்ட நீதிபதி அமரர் திரு ந. யோகசிகாமணி அவர்கள்.



வாராந்த வெள்ளி நிகழ்வில் பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள் உரையாற்றும் நிகழ்வு.



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் 1994ஆம் ஆண்டிற்கான ஞானபண்டித தமிழ்க் குரிசில் விருதினைப் பெற்ற யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் உரை நிகழ்த்தும் காட்சி.



ஞான பண்டித தமிழ்க்குரிசில் விருதுபெற்ற பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுடன் வைகாசிப்பெருவிழாவைச் சிறப்பித்த பிரதம விருந்தினர், போஷகர்கள், சிறப்புவிருந்தினர்கள் உட்பட பேரவையின் செயற்குழு உறுப்பினர்கள்.




ஆச்சிரமத்தில் அமைந்துள்ள அறுபத்துமூவர் குருபூசை மண்டபத்தில்
பக்திபூர்வமாக நடாத்தப்படும் குருபூசை நிகழ்வில் சுவாமி அவர்களால்
சிவபுராணம் ஓதம் நிகழ்வுடன் குருபூசையில் நடைபெறும் ஏனைய நிகழ்வுகள்.





அநுராதபுரம் விவேகானந்தா சபையின் பொன்விழாவின்போது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பேரவையின் செயலாளர் திரு ந. அரியரத்தினம் அவர்களும் பேரவை உறுப்பினர் திரு செ. நடராசா அவர்களையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.





அநுராதபுரம் விவேகானந்த சபை'பின் பொன்விழா நிகழ்வின்போது ஆச்சிரமம் சார்பில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பேரவையின் செயலாளர் திரு ந. அரியரத்தினம் கருத்துரை வழங்கும் நிகழ்வு.




வருடாந்த திருவாசகவிழாவின்போது அடியார்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து நாயன்மார்களது திருவுருவப்படமும், திருவாசக ஏடுகளும் ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்படும் நிகழ்வு



மேற்படி திருவாசக விழாவின்போது பேரூர் ஆதீன முதல்வர் அவர்கட்கு ஆச்சிரம சுவாமி அவர்கள் பொன்னாடை அணிவிக்கும் நிகழ்வு.



16.05.1993ஆம் ஆண்டு வைகாசிப்பெருவிழாவின்போது பேரவையினால் ஞானபண்டித இசை அரசு என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சங்கீத பூஷணம் S. குமாரசாமி அவர்கள் உரை நிகழ்த்தும் நிகழ்வு.



16.05.1993ஆம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப் பெருவிழாவின்போது திரு ந. அனந்தராஜ் அவர்கள் உரையாற்றுவதுடன் பேரவையின் அழைப்பையேற்று வருகைபுரிந்த பெரியோர்கள் மேடையில் அமர்ந்திருக்கும் காட்சி.



ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வாராந்த வைத்திசேவையின்போது நோயாளி ஒருவரை வைத்தியர் M. யோகேஸ்வரதேவன் பார்வையிடும் காட்சி.



ஆச்சிரமத்தில் நடைபெறும் மகப்பேற்று வைத்தியசேவையின்போது அதற்குரிய நோயாளி ஒருவரை வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி G. பவானி அவர்கள் பார்வையிடும் நிகழ்வு.



ஆச்சிரமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொது வைத்தியசேவையின்போது
டாக்டர் பொன். சின்னத்தம்பி நோயாளி ஒருவரை பரிசோதிக்கும் நிகழ்வு.



ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பொது வைத்தியசேவையின்போது
டாக்டர் சி. சிவயோககுரு அவர்கள் நோயாளி ஒருவரை பார்வையிடும் காட்சி.




ஆச்சிரமத்தில் நடைபெறும் வைத்தியசேவையின்போது பயனடையும் நோயாளர்களை நெறிப்படுத்தும் காட்சி.



வைத்தியர்களினால் பார்வையிடப்பட்ட நோயாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் மருந்தினை ஆச்சிரமத் தொண்டர்கள் வழங்கும் காட்சி.




அருணகிரிநாதர் விழாவில் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற திருப்புகழ் இசை நிகழ்வில் தாவடியூர் திருஞானசம்பந்தன் கலந்துகொள்ளும் நிகழ்வு.



அருணகிரிநாதர் விழாவின்போது தலைமையேற்ற காரை கு. சிவராஜசர்மா சிறப்புச் சொற்பொழிவாற்றவந்த லலீசன் ஆசிரியர் உடனிருக்கும் காட்சி.




ஆச்சிரமத்தில் நடைபெறும் கந்தசஷ்டிகால விசேட நிகழ்வில் தொடர் சொற்பொழிவாற்றிய இரா செல்வவடிவேல் அவர்களுக்கு விரிவுரையாளர் அ. குமாரவேல் அவர்களால் பொன்னாடை அணிவிக்கும் காட்சி



வைகாசிப்பெருவிழாவின்போது பேரவையால் கௌரவிக்கப்படும் பெரியோருக்கு பேரவையினால் வழங்கப்படும் விருதும் சான்றிதழும்.



வருடாவருடம் நடைபெற்றுவரும் திருவாசகவிழாவின்போது போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு தமிழகத்திலிருந்து வருகைபுரிந்த தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் பரிசு வழங்கும் காட்சி.




பேரவையினால் நடாத்தப்படும் திருவாசகவிழாவின்போது வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு உதவி அரச அதிபர் செ. ஸ்ரீனிவாசன் அவர்கள் பரிசு வழங்கும் நிகழ்வு.



காலத்துக்குக் காலம் நடைபெற்றுவரும் திருவாசக விழாவின்போது கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அவர்கள் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசு வழங்கும் நிகழ்வு.

திருவாசக விழாவில் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு மாவட்ட நீதிபதி ஈ.ஏ. ஏகநாதன் பரிசுவழங்கும் காட்சி





09.10.1999இல் வடமராட்சி மக்கள் சார்பில் நடைபெற்ற செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் பாராட்டும் வைபவத்தில் ஆலயத்திலிருந்து ஆச்சிரமத்திற்கு அழைத்து வரப்படும் காட்சி.



07.01.2001இல் நடைபெற்ற திருவாசகவிழாவின்போது தமிழகத்தைச் சேர்ந்த கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன் (சேக்கிழார் அடிப்பொடி) உரையாற்றுவதையும் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதையும் காணலாம்.



ஆச்சிரமத்தால் நடாத்தப்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகளில் ஒருவர் உரையாற்றும் காட்சி.




ஞானச்சுடர் மலர் வெளியீட்டின்போது மதிப்புரை நிகழ்த்தவந்த காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கட்கு வெளியீட்டுரை நிகழ்த்திய ஆசிரியர் பரமேஸ்வரன் மாலை சூட்டும் காட்சி.



சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்களது மணிவிழா ஆச்சிரமத்தில் இடம்பெற்ற போது வ. குமாரசாமி ஐயர் அவர்களோடு பேரவையைச் சார்ந்தவர்களும்.




மேற்படி மணிவிழாவின்போது ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட விருதுடன் சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் தம்பதிகளும் பேரவைப் போஷகர்களும்.



கொழும்பு சபாரெத்தினம்சுவாமி தொண்டர் சபையினால் வழங்கப்பட்ட "அமுதகலா யோதி" எனும் விருதுக்குரிய சான்றிதழை ஆச்சிரம சுவாமிகள் சார்பில் கலந்துகொண்ட பேரவை உறுப்பினர் சி. நாகலிங்கம் அவர்கள் சுவாமி தந்திரதேவா அவர்களிடம் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு.



ஆச்சிரமத்தில் முருக கிருபானந்தவாரியாரின் திருவுருவச்சிலை பிரதிட்டை செய்யும் நிகழ்வு.



இரண்டாவது உலக இந்து மாநாட்டின்பொழுது மறைந்த முன்னாள் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த திரு தி. மகேஸ்வரன் அவர்கள் ஆச்சிரமத்தால் நடாத்தப்பட்ட இந்து சமய எழுச்சிவிழாவில் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டு பிரதமகு வி. தெய்வேந்திரம் ஐயரிடம் ஆசிபெறும் காட்சி.





மேற்படி விழாவின்போது ஆலயவழிபாடு முடிந்து அடியார்களுடன்
ஆச்சிரமத்துக்கு அழைத்துவரப்படும் காட்சி.





மேற்படி இந்துசமய எழுச்சிவிழாவில் கலந்துகொள்ள வந்த இந்திய அறிஞர் பேராசிரியர் இரா செல்வகணபதி சந்நிதி ஆலய குருக்களிடம் காளாஞ்சி பெறும் நிகழ்வு.



எழுச்சி விழாவில் ஆசிஉரை வழங்கும் பேரவைப் போஷகராகிய ப. மனோகராக் குருக்களுடன் இந்திய தமிழ் அறிஞர்கள் மேடையில் அமர்ந்திருக்கும் காட்சி.



இந்துசமய எழுச்சி விழாவிற்கு ஆச்சிரமத்திற்கு வருகைதந்த தமிழக அறிஞர்கள் சொற்பொழிவாற்றுதலையும் பஜனை நிகழ்வில் ஈடுபடுதலையும் காணலாம்.



30-04-2006இல் ஞானச்சுடர் 100ஆவது மலர் வெளியீட்டுவிழா நடைபெற்றது. ஞானச்சுடர் ஆரம்பகாலம் முதலே ஆக்கங்கள் தந்துவரும் 92 வயது தாண்டிய திரு வை.க. சிற்றம்பலவனார் அவர்கள் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார்.

60 வயது கடந்தும், சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையாற்றிவரும் சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்களது மணிவிழாவும் - பாராட்டுநிகழ்வும் ஆச்சிரம மண்டபத்தில் நடந்தேறியது.

## நூல் வெளியீடு

2000ஆம் ஆண்டில் வல்வை ந. அனந்தராஜ் அவர்கள் எழுதிய "சந்நிதிச் செல்வம்" நூல் வெளியீடு செல்வச்சந்நிதி ஆலய பிள்ளையார் வாசலில் சந்நிதியான் ஆச்சிரமத்து ஆதரவில் நடைபெற்றது. ஏனைய நூல் வெளியீடுகள் ஆச்சிரம கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

2003இல் கவிஞர் ஆ. கதிர்காமத்தம்பி அவர்களின் "திருவிளையாடற் பூசைப்பா மலர்கள்" நூல்வெளியீடும், 2004இல் கோப்பாய் சிவம் எழுதிய "அருள் வழங்கும் மாரியம்மன்", "இதுதான் இந்து தர்மம்" என்ற இரு நூல்களும், 2006இல் திருமதி கதிர்காமத்தம்பி எழுதிய "திருவருட்பயனின் வசனரூபம்" என்னும் நூலும், 2007இல் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற "முருக மந்திரம்" என்னும் நூலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெளியிடப்பட்டன.

வெளியீடுகள் நடைபெற்ற வேளைகளில் அறிஞர்கள் பலராலும் வெளியீட்டுரை களும் மதிப்பீட்டுரைகளும் நிகழ்த்தப்பட்டு, நூல் ஆசிரியர்களுக்கு வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன.

## கடல் அனர்த்தம்

2004 மார்கழியில் கடல் அனர்த்தம் ஏற்பட்டு, கரையோர மக்களெல்லாம் அல்லற் பட்டவேளையில் சந்நிதியான் ஆச்சிரமம் தன்னால் முடிந்தளவு அன்னப்பணி ஆற்றியது. கூட்டம் கூட்டமாக இடம்பெயர்ந்து உடுப்பிட்டி, மாலிசந்தி, பொலிகண்டி போன்ற இடங்களில் அமைந்த தற்காலிக முகாங்களில் தங்கியிருந்த மக்களுக்கு, சமைத்த உணவாக 1500 உணவுப் பொட்டலங்கள் ஒரு வார காலத்துக்கு வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு குடத்தனை- நாகர்கோயில் பகுதிகள், கடல் அனர்த்த எச்சங்களின் துப்புரவு வேலையில் ஈடுபட்ட பொதுமக்களுக்குத் தொடர்ந்து ஒரு மாத காலத்துக்குத் தினமும் 500 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

# சுவாமிகளுக்கு வாழ்த்து

சந்நிதியான் ஆச்சிரமத்தின் உடலும் உயிருமாகவிருக்கும் திரு மோகனதாஸ் சுவாமிகளுக்குப் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் அடியார்கள் சார்பிலும், அறிஞர் பெருமக்கள் சார்பாகவும் இருமுறைகள் ஆச்சிரம மண்டபத்திலும், ஒருமுறை கொழும்பிலும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

27-01-2002இல் பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா அவர்களால் "அமுதகாலா யோகி" என்ற விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்டது. 11-02-2006இல் திருவாசகம் ஸ்ரீமத் சபாரெத்தினம் சுவாமிகளால் "அமுதவாருதி" என்ற விருது வழங்கப்பட்டது.

31-08-2007 சுவாமியவர்களின் அன்பர்களினால் "அறப்பணி அரசு" என்னும் விருதும் வழங்கப்பட்டது.

ஆச்சிரமத்தின் அனைத்து விழாக்களிலும் உரை நிகழ்த்துகின்ற ஒவ்வொருவரும் சுவாமிகளின் அன்னப்பணி - சமுதாயப்பணி ஆகியவற்றை வாயார ஏற்றிப்போற்றி வாழ்த்தி நிற்பார்கள்.

ஆச்சிரமத்தின் ஒவ்வொரு அசைவிலும் அவரது முத்திரை பதிந்திருக்கும். "இன்னமும் என்ன செய்யலாம் எப்படிச் செய்யலாம்" என்று சிந்திக்கின்ற முகபாவம் எப்போதும் இருக்கும்.

இப்பணி என்றும் தொடர வாழ்க பல்லாண்டு! பல்லாண்டு!! என்று பேரவையினரும், ஆச்சிரமத்தின் ஆர்வலர்கள் அனைவரும் சுவாமிகளை வாழ்த்தி நிற்கிறார்கள்.



# நன்றிக்குரியவர்கள்

சந்நிதியான் ஆச்சிரமம் சேவைகள் பணிகள் எனும் தொகுப்பினூடாக ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் சகல சமய, சமுதாயப் பணிகளுக்கு மூலகாரணமாக அமைவது நித்திய அன்னப்பணியேயாகும்.

இப்பணியினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆரம்பத்தில் இருந்த இடர்களோ பல. அப்படி இருந்தும் ஒரு சில அன்பர்களின் உதவியை நாடவேண்டிய நிலையில், அவர்களும், மனம் கோணாத முறையில் ஆதரவு நல்கிய வகையில் இப்பணியை முன்னெடுத்தோம். ஆனால் இங்கே நடைபெறும் நித்திய அன்னப்பணியை அன்னதானக் கந்தனாக விளங்கும் சந்நிதிவேலவனின் அருளின் மகத்துவத்தாலும், குருநாதராக விளங்கும் மயில்வாகனம் சுவாமிகளின் ஆசியினாலும் இப்பணி இன்றுவரை எவ்விதமான இடர்பாடுகள் இல்லாத வகையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் ஆதரவு நல்கும் அன்பர்களைத் தேடிச்சென்று பெற்றுக்கொண்டதைவிட இன்று எம்மை நாடிவந்து ஆதரவு தருபவர்களே அதிகம். அதிலும் குறிப்பாக தனது இறுதிக்காலத்தில் ஆச்சிரமத்தோடு இணைந்த முருகேசு சுவாமிகளின் பணியினையும் நாம் மறக்கமுடியாது.

இந்தத் தூய பணியினை முதலாக வைத்து இன்று ஆச்சிரமத்தினால் ஆற்றப்படும் சகல பணிகளும் வளர்ந்துகொண்டே போவதை நாம் மட்டுமல்ல ஆச்சிரமத்தோடு ஈடுபாடு கொண்டவர்கள் அனைவரும் அறிவார்கள். அவ்வகையில் வறிய குடும்பங்களுக்கு மாதாந்த நிவாரணஉதவி, பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி, மாத உதவி, வாரத்தில் மூன்று நாட்கள் வைத்தியசேவை எனப் பல பணிகளுக்கு வித்திட்டது இந்த நித்திய அன்னப்பணியேயாகும்.

ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல பணிகளுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்குவது, விளங்கிக்கொண்டிருப்பது சந்நிதியானும் நித்திய அன்னப்பணிக்கு ஆதரவு நல்கும் அன்பர்களும்தான். இவ்வகையில் நோக்குமிடத்து மறைந்த அமரர் தி. மகேஸ்வரன் அவர்களால் காலமறிந்து செய்த உதவியினை நாம் என்றுமே நினைவில் கொள்ளத்தக்க வண்ணம் உள்ளது.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க ஆதரவு நல்கும் அனைவருக்கும் சந்நிதி வேலவனின் அருளாட்சி பூரணமாக கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திப்பதோடு எமது மனப்பூர்வமான நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குருபணியில்
செ. மோகனதாஸ்

உ

# மக்கள் மனம் கவர்ந்த மகேஸ்வரன்.....

ஒரு இனத்தின் பிரதிநிதியாக, மொழியின் காவலனாக மட்டுமன்றி, தனது சமயத்தின் விசுவாசியாகவும் அதன் உதாரண புருஷராகவும் விளங்கியவர் என பலவகைப்பட்ட கோணங்களில் முன்னாள் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த அமரர் தி. மகேஸ்வரன் அவர்கள் நோக்கப்படுகிறார்கள். அதுமட்டுமன்றி ஏனைய இனத்தவர்களாலும் மதிக்கப்படுகின்ற நிலைக்கு தன்னை உயர்த்திக்கொண்ட பெருமைக் குரியவராகவும் அவர் நோக்கப்படுகின்றார்.

மிகக்குறுகிய காலத்தில் தனது தனித்துவமான ஆளுமைப் பண்புகளால் தன்னை மிக உயர்வான நிலைக்கு உயர்த்திக்கொண்டவர் அமரர் தி. மகேஸ்வரன் அவர்கள். ஆனாலும் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் அவர் மிக நீண்டகாலத்தொடர்பு கொண்டுள்ள ஒருவராக இருந்து வந்துள்ளார். அதுமட்டுமல்ல சந்நிதியான் ஆச்சிரமத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்புகளும் ஒரு வித்தியாசமான தொடர்பாக இருந்ததையும் நாம் இவ்விடத்தில் வெளிப்படுத்துவது பொருத்தமானது.

அவர் ஒரு வர்த்தகராக இருந்த காலத்திலேயே சந்நிதியான் ஆச்சிரமத்தினுடைய தூய்மையான செயற்பாடுகளால் கவரப்பட்டு ஆச்சிரமத்துடன் இறுக்கமான தொடர்புகளை ஏற்படுத்த ஆரம்பித்தார். அவ்வாறு ஏற்படுத்திய இந்த இறுக்கமான தொடர்பு அவர் அமரத்துவம் அடைவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்புகூட ஆச்சிரமத்துடன் தொடர்புகளை வைத்திருக்கக்கூடிய அளவுக்கு இறுக்கமான தொடர்பாகவே நீடித்திருந்தது. இந்த வகையில் அவரது இந்த இழப்பு அவரது குடும்பத்தைப்போல எமக்கும் ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமைந்துவிட்டது.

யாழ் குடாநாட்டில் சந்நிதியான் ஆச்சிரமம் ஒரு சமய நிறுவனமாக மட்டுமன்றி சமூக நிறுவனமாகவும் செயற்படுகின்ற முற்போக்கான நிறுவனமென்பதை அமரர் அவர்கள் நன்கு விளங்கிக் கொண்டவர். இதனால் அவர் வர்த்தகராக, பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக பல்வேறு படிநிலைகளில் இருந்த காலங்களில் அந்தந்த நிலைகளில் நின்று ஆச்சிரமத்திற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் தனது முழுமையான பங்களிப்பினை செலுத்திய பெருமைக்குரிய ஒருவராக அவர் எம்மால் மதிக்கப்படுகின்றார்.

முக்கியமாக இந்து கலாச்சார அமைச்சராக அவர் செயற்பட்ட காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தை விரிவுபடுத்துவதற்கும் சந்நிதியான் ஆச்சிரமம் செயற்படுத்தி வந்த சமூகத்தொண்டுகளுக்கும் அவர் மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளதை யும் நாம் நன்றியுடன் நினைவு கூர்வதை எமது கடமையாகக் கருதுகின்றோம். அதுமட்டு மன்றி சந்நிதியான் ஆச்சிரமத்தினூடாக பல ஆலயங்களுக்கும் வறுமைப்பட்ட மக்களுக்கும் பல்வேறு செயற்பாடுகளை செயற்படுத்தி உதவியதும் குறிப்பிடத்தக்கது.

நல்லதையே நினைத்து நல்லதையே செய்த மக்கள் தொண்டன் அமரர் மகேஸ்வரன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக சந்நிதியானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*சந்நிதியான் ஆச்சிரமம்*
*ஸ்ரீ செல்வச்சந்நிதி*
*தொண்டைமானாறு.*



அச்சகம்
சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.